# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

**FIFTH** SEMESTER – **APRIL 2016**

**TL 5502 - SANGAM LITERATURE**

Date: 26-04-2016 Dept. No. Max. : 100 Marks
Time: 09:00-12:00

**பகுதி-அ**

**பின்வரும் வினாக்களுக்கு 20 சொற்களில் விடையளிக்க.** (10x2=20)

01. குறுந்தொகை நூலைத் தொகுத்தவர் யார்? அதன் அடிவரையைக் குறிப்பிடுக.
02. குறுந்தொகையில் தலைவி 'முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?' என்று எதற்காக கூறுகின்றாள்?
03. ''விளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்னையும் உளனே!'' என்று ஔவையார் கூறக் காரணம் யாது?
04. வாகைத்திணை என்றால் என்ன?
05. மருதக்கலி என்பது யாது?
06. ''தாம் கொண்டது கொடுக்குங்கால் முகனும் வேறு
ஆகுதல் பண்டும் இவ்வுலகத்து இயற்கை'' - இவ்வரிகளுக்கு விளக்கம் தருக.
07. நற்றிணையில், ஓரி என்னும் வள்ளலின் செல்வத்தைவிட மேலானவை எவை?
08. ஐங்குறுநூற்றின் பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
09. பத்துப்பாட்டில் காணலாகும் அகநூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
10. அகநானூற்றின் அமைப்பு முறையை எழுதுக.

**பகுதி-ஆ**

**எவையேனும் ஐந்தனுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.** (5x7=35)

11. 'அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே' - என்னும் குறுந்தொகை பாடற்கருத்தை விவரிக்க.
12. 'நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக', என அதியனை, ஔவையார் ஏன் வாழ்த்துகின்றார்?
13. ஆற்றுதல் என்பது அலர்ந்தவர்க்கு உதவுதல் என்ற தோழிக்கூற்றை கலித்தொகை வழி விளக்குக.
14. வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லிய நற்றிணைப் பாடற் கருத்துகளை எழுதுக.
15. 'பிரியேன் என்றவன் பிரிந்தனன்', என்று ஐங்குறுநூற்றின் தலைவி வருந்தியக் காரணத்தைத் துறையுடன் விளக்குக.
16. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் மாலைக்கால நிகழ்வுகளை விளக்கி வரைக.
17. வரைவு நீட்டித்த தலைமகற்கு, தோழி கூறிய அறிவுரையினை, கபிலரின் அகநானூற்றுப் பாடல் வழி நிறுவுக.

**பகுதி-இ**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.** (3x15=45)

18. வெள்ளிவீதியார் பாடற்கருத்துகளை குறுந்தொகை வழி விளக்குக.

**( அல்லது )**

அதியமான் நெடுமானஞ்சியின் வீரத்தையும், கொடையையும் ஔவையார் பாடல் வழி நிறுவுக.

19. தலைவியின் பின்சென்ற செவிலித்தாய்க்கு, இடைச்சுரத்து எதிர்ப்பட்ட அந்தணர் கருத்தை கலித்தொகைப் பாடல்வழி விவரிக்க.

**( அல்லது )**

களவொழுக்கத்தில் தலைவியின் நிலை குறித்து நற்றிணைக்கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

20. வேட்கைப்பத்தின் மூலம் அறியப்படும் தலைவியின் மாண்பினையும், தோழியின் வேட்கையையும் விளக்கி எழுதுக.

**( அல்லது )**

பொருள்வயிற் பிரியக்கருதிய தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறிச் செலவழுங்கியதாக வரும் அகநானூற்றுப் பாடல் கருத்தினைப் புலப்படுத்துக.

***********